# ‘குபேர’ நாட்டிலும் தொழிலாளர் தவிப்பதா?

## 40,00,000 தொழிலாளர் தவிக்கின்றனர்!

## உலகுக்கு உதவும் நாட்டில் இருக்கலாமா இந்தத் தொல்லை?

### அந்த வழியை விரும்புவோருக்கு அர்ப்பணம்!

அமெரிக்கா குபேரநாடு! பெரும் பெரும் தொழிற்சாலைகளைக்கொண்ட பண அரசு! உலகுக்கே உதவிசெய்யும் ஆற்றலும் ஆசையும்கொண்டுள்ள நாடு! அவர் அவர் விரும்பும் வண்ணம், இரண்டொரு, தனக்குச் சாதகமான நிபந்தனைகளின் மீது, எல்லா நாடுகளுக்கும் எல்லாவகை உதவிகளும் செய்யும் நிலையில் உள்ளநாடு! உணவுப்பொருள் வேண்டுமா—எவ்வளவு டன் கோதுமை? நெசவாலைகள் வேண்டுமா—எண்ணிக்கை எவ்வளவு? ஏராவி இயந்திரங்கள் தேவையா—உடன் அனுப்பித் தருகிறோம் நூற்றுக்கணக்கில்! புதாக மோட்டார் தேவை இருக்குமா? மின்சார சாதனங்கள் அவசியமா? ஆயுதங்கள் அத்தியாவசியமா? என்னவேண்டும், எவை வேண்டும். அவர் அவர் விரும்பியவண்ணம் எப்பொழுதும் உதவியளிக்கக் காத்துக்கொண்டு இருக்கும் கண்கண்டக் கடவுளாக இருப்பது குபேர அமெரிக்காதான்!

குபேர நாட்டிலே — கோவணாண்டி! ஆச்சரியப்படுவீர்கள், இச் சொல் பார்த்து! ஏதோ அமெரிக்கா மீது, நமக்குப் பகை, எனவே பிதற்றுகிறோம் பேதபுத்தி கொண்டு என்று எண்ணுவீர்—அறிவோம்!

அணுகுண்டை இரவல் கேட்கப்போகிறோமா—ஆலை அமைக்க அதிகாரம் படைத்திருக்கிறோமா — நாடு பிடிக்கத்தான் நமக்கென்ன அதற்கான வாய்ப்பு இருக்கிறதா — எதிர்பார்த்தோம், ஏமாற்றம் கண்டோம், எரிச்சல் அடைந்து ஏசுகிறோம் — இட்டுக்கட்டிப் பேசுகிறோம் — இணையற்ற அமெரிக்காவை—என்று எவராவது தீர்மானித்துக்கொள்ள!

பத்திரிகையிலே பார்க்கிறோம், சித்திரவதை செய்யப்பட்டு, உண்மை திருத்திக்கூறப்பட்டு, உருக்குலைந்து வெளியிடப்படும்—அதுவும் அவர்களாலேயே வெளியிடப்படும் செய்தித்தாள்களில், சிறு சம்பவமாக இருந்தால், அதனைக் கொலை செய்ய வேண்டிய சிரமம் சிறிதாகஇருக்கும். அதனை, வெளியுலகு தெரிந்துகொள்ள முடியாத நிலையிலே இருட்டடிப்புச் செய்துவிடக்கூடும் சம்பவம், சத்திய சோதனைகளுக்கெல்லாம் கட்டுப்படாத அளவில் பெரிதானதாக இருக்குமானால், ஏதோ ...களை வெட்டித், தலைகளைத் திருகிக், கால்களைத் துண்டித்து, உருத் தெரியாமல் குலைத்து, ஊர் பக்கங்களுக்கும். உலக மக்களுக்கும் உணர்த்தப்படவேண்டிய நிர்பாகத்தைக் கொடுத்துவிடுகிறது, அதற்குத் தொடர்புடையவர்களுக்கு, இப்படிக் கிடைத்தது தான், ‘குபேர நாட்டிலும்— கோவணாண்டி!’ என்ற செய்தி

ஐஸ்வரிய அமெரிக்காவில் உள்ள மொத்தம் — படைவீரர்கள் நீங்கலாக—மக்களில்நாற்பது லட்சம் பாட்டாளி மக்கள் வேலையிழந்து இருந்தார்களாம், 1949 ஜுலைமாதத்தில். இதேகாலத்தில் 1948-ல் மொத்தம் 22,50,000 தொழிலாளர்கள் தொழிலற்று இருந்தார்களாம் அங்கு!

உலக மக்களுக்கு வேலைத் தேடித்தரவும், வாழ்க்கைத் தரத்தைஉயர்த்தப்போவதாகவும் உச்சரித்துக்கொண்டு இருக்கும் அமெரிக்காவில், ஏன் இந்த அழுகுரல் கேட்கிறது? தொழில் வளம், வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு உயர்ந்து வளர்ந்து முன்னேறி இருக்கிறது; எல்லாத் துறைகளிலும் உற்பத்தி எத்தனையோ மடங்குக் கூடுதலாகி இருக்கிறது; மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாதுத் தேவைப்படும் பொருள்கள் அனைத்தும் மலைமலையாகக் குவித்துவைக்கப்பட்டு இருக்கின்றன; செல்வம் ஹிமயம் உயரத்திற்கு எழுந்துவிட்டிருக்கிறது; நாற்பது லட்சம் மக்கள் நடுத்தெருவில் நிற்கின்றனர். அதே நேரத்தில்-அந்தச் செல்வப் பெருக்கெடுத்தோடும் சிறந்த நாட்டில்! இது முரண்பாடாகத் தெரியவில்லையா? என்ன இதற்குக் காரணம்? உற்பத்திப் பெருகினால், அதற்காக வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக் கொண்டு பாட்டாளிகள் பாடுபட்டால்தான், மக்கள் துயர் தீருமென்று தினம் தினம், கிளிப்பிள்ளைகள்போல் பேசிக் கொண்டு இருக்கும், நமது ஆளவந்தார்களுக்கு இதனை, அர்ப்பணம் செய்கிறோம்! முரண்பாட்டின் மூலகாரணத்தைக் கண்டறிந்து, அதனைக் களைந்து, நாட்டு மக்களுக்கு உண்மையில் நல்வாழ்வு அளிக்கும் திட்டத்தைத் தீட்டி, நடவடிக்கை மேற்கொள்ள முன்வரவேண்டும் நமது ஆளவந்தார்கள் என்பதற்குத்தான், இந்த முரண்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 | சென்னை (4—10—49) வெளியீடு (5—10—49) | இதழ் 56

## மக்களை மயக்கி ஏமாற்றும் விளம்பரங்கள்

—————(o)—————

### தடுத்து நிறுத்த பம்பாய் அரசாங்கத்தின் முயற்சி

## சென்னை அரசாங்கத்துக்கு அந்த நல்லவழி புலப்படுமா?

போலித்தனமான மருந்துகள், கவசங்கள், சோதிட ராசிபலன்கள் முதலியவைகளைப் பத்திரிகைகளில் வெளியிட்டு மக்களை மயக்கிப் பணம் ஈட்டும் செயலைத் தடுத்து நிறுத்த, பம்பாய் மாநில அரசாங்கத்தினர் ஒரு சட்டம் நிறைவேற்றத் திட்டம் தயாரிப்பதாக பம்பாய் முதலமைச்சர் தோழர் கேர் பம்பாய்ச சட்ட சபையில் தெரிவித்தார்.

சென்னை மாநிலத்திலிருந்து வெளிவரும் எல்லா மொழித் தேசீயப் பத்திரிகைகளிலும், பம்பாய் முதலமைச்சர் வெறுக்கும் விளம்பரங்கள் வராத நாளில்லை.

இந்தப் பத்திரிகைகளில் வெளிவரும் விளம்பரங்களில், மக்களுக்கு வேண்டிய மருந்துகள், மருத்துவர்களால் செய்யப் பட்டவையாக இருப்பதில்லை. இமயமலையில் விளைவது, பராசக்தி அருளியது, மகான்கள், மகரிஷிகள் மொழிந்தது ஆகியவற்றால் கிடைத்த மருந்துகளாகவே இருக்கும்.

வாலிபமுறுக்கேற, சாகா திருக்க, நரை திரை மாற, குஷ்டம் க்ஷயமெல்லாம் தீர, பத்திரிகை விளம்பரங்களில் சொற்ப விலையில் மருந்துகள் இருக்கக் காணலாம்.

இவை தவிர, இறந்தோருடன் பேச, தொலை நாடுகளிருப்போருடன் அளவளாவ, காதலன்-காதலியரை சேர்த்து வைக்க, கருவிகள், கவசங்கள், குளிசங்கள், தாயத்துக்கள் பத்திரிகை விளம்பரங்களில் கிடைக்கும்.

ராசிபலன்கள், ஐந்து கேள்விகளுக்குப் பதில், பூவை நினைத்துக் கொண்டு கேள்வி கேட்டால், ஆயுட்பலன், மரணமாகும் தேதி, குதிரைப் பந்தயத்தில் வெற்றி பெறும்குதிரை, இவைபோன்றவைகளை முன் கூட்டி யறிவிக்கும் ஜோதிடங்கள் பத்திரிகை விளம்பரங்களில் காணலாம்.

இவ்வாறாக இன்னும் பலவகை ஆபாச விளம்பரங்களும் மக்களை ஏமாற்றிப் பொருள்பறிக்க இடந்தரும் விளம்பரங்களும் தேசியத் தாள்கள் என்பவற்றில் நாடோறும் இடம் பெற்று வருகின்றன.

இவற்றை யெல்லாம் தடை செய்து, மக்களை ஏமாற்றும் வேலை எதுவாயினும் அதை நிறுத்துதல் வேண்டுமென்னும் முடிவுடன் பம்பாய், அரசாங்கத்தைப் போன்று சென்னை அரசாங்கமும் முன் வருமா?

நாட்டுமக்களின் நிலையைஉயர்த்த வேண்டுமென்றும், பிறருடைய எத்தகைய சுரண்டலுக்கும் மக்களை ஆளாக்கும் மட்டரகச் செயல்களை நிறுத்தி ஒழிக்கவேண்டுமென்று பொதுமக்கள் கோருவது சென்னை அரசாங்கத்தின் செவிக்கெட்டுமா?

## அன்றில்லாவிடினும் இன்றேனும் உண்மை தெரிந்ததா?

### அவிநாசியார் அரசாங்கத்தினருக்கு கூறும் அறிவுரை

சென்னை மாநில அரசாங்கம் அண்மையில் பிறப்பித்துள்ள ஆணைப்படி ஆரம்பப் பள்ளியில மாணவ- மாணவிகள் தாய்மொழியை மட்டும் படித்தல் வேண்டும். அவர்கள் நடுத்தரக் கல்வி பயில வருகையில், தாய்மொழியோடு, தேசியமொழி என்னும் பேரால் இந்தியையும், அனைத்துலக மொழி என்பதற்காக ஆங்கிலத்தையும் பயில வேண்டியவர்களாகின்றார்கள்

இந்த நிலைமை திடீரென்று தோன்றிவிட்டதன்று பலமுறை நம் நாட்டில் புகுத்தப்பட்டு,அப்போதைக்கப்போது நாம் வன்மையாகக் கண்டித்து எதிர்த்து வந்துள்ளதொரு முறையேயாகும். தோழர் அவிநாசிலிங்கம் கல்வியமைச்சராக இருந்தபோது, இந்திக் கூச்சல் கிளப்பப்பட்டு, அப்போதும் நாம வன்மையாக எதிர்த்துள்ளோம். ஆனால் நம் எதிர்ப்புக்கு இணங்காமல் வீம்புக்கேனும் இந்தியை ஆதரித்துக் கொண்டிருந்த தோழர் அவிநாசியார் அண்மையில் கோவை, நீலகிரி மாவட்ட ஆசிரியர் மாநாட்டில் பேசியபோது “ஒரே சமயத்தில் ஒன்றோடொன்று வேறுபட்ட இரு வேறு மொழிகளைத் தாய்மொழியுடன் சேர்த்துப் படிக்குமாறு பள்ளிச் சிறுவர்களை வற்புறுத்துவது, அவர்கள் தலைமீது தாங்கமுடியாத சுமையை ஏற்றிவைப்பதையே ஒக்கும்” என்று கூறியுள்ளார்

இதைத்தானே அன்று நாம் கூறினோம். போகட்டும், அன்று ஆட்சிப்பீட ஆணவம் அவர்களை மறைத்திருந்ததென்றாலும் இன்றாவது உண்மையை உணர்ந்து அதை வெளியிலுரைத்ததற்காக அவரைப் பாராட்டுகின்றோம். ஆனால், இப்படிக் கூட்டங்களில் பேசிவிட்டால்போதுமா? இதற்காக, நம் சிறுவர்களின் நலனுக்காக, அவர்களின் அறிவு விருத்திக்காக, முற்போக்குக்காக, தோழர் அவிநாசியார் தாம் கருதுவதைச் செயலாற்ற முனையும் துணிவு பெறுவாரா?

## நூற்றுக்கு ஒரு சொல்!

“சுதந்திரப் போராட்ட காலத்தில் தென்பட்ட சேவை தியாகம் ஆகிய உணர்ச்சி முன்னிறக வேண்டும். சமீப காலமாகப் பேராசை சுயநலம வளர்த்தல், நாட்டு நலனைப் புறக்கணித்தல், ஆகிய மனோபாவம் தலையெடுத்து வருகிறது.”

—ஆசாத்.

# மாலை மணி

சென்னை 4—10—49 செவ்வாய்க்கிழமை


# பிரித்துவிட்டார்கள்!

நீதிக்கும் - நிர்வாகத்திற்கும் செய்துவைக்கப்பட்ட 'மணம்' 'பொருந்தா மணம்', ஆகவே 'மணவிலக்கு' ஏற்பட வேண்டும் என்ற விருப்பத்தை, இந்நாட்டு அறிஞர் பெருமக்கள் பலரும், பல நாட்களாக எடுத்துரைத்து வந்தனர். அரசாங்கம், அவைகளுக்கிடையிலே பிரிவினையை நடத்தி வைக்க மனங்கொள்ளாமலேயே இது வரையில் இருந்துவந்தது. நீதிக்கும் — நிர்வாகத்திற்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் 'சண்டைச்சச்சரவுகளை' ஒழிக்க வேண்டுமானால், பிரிவினையை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியது இன்றியமையாததாகும் என்பதை உணர்ந்து, நீதி—நிர்வாகப் பிரிவினைத் துவக்க விழாவை, சென்னை அரசாங்கம், செங்கற்பட்டிலும், வேலூரிலும் 2—10—49ல் நடத்தி வைத்திருக்கிறது.

நீதி-நிர்வாகப் பிரிவினையை அமுலுக்குக் கொண்டு வந்துள்ள சென்னை அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம்; போற்றுகிறோம்; அது குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

சென்னை அரசியலார், இப்பொழுது செங்கற்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய இரு மாவட்டங்களில் மட்டும் இந்தத் திட்டத்தை முன்மாதிரியாக நிறைவேற்றிவைத்துப் பார்க்க முற்பட்டுள்ளனர். செங்கற்பட்டுத் துவக்கவிழாவில் கலந்துகொண்ட மந்திரி தோழர் பக்தவத்சலம், இன்னும் ஓராண்டிற்குள் மேலும் பத்து மாவட்டங்களில் இத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுவிடும் என்று அறிவிப்புச் செய்துள்ளார்.

நீதி-நிர்வாகப் பிரிவினையை நடைமுறையில் கொண்டு வருவதில், சென்னை அரசாங்கம் எடுத்துக்காட்டாக இருப்பதும் மகிழ்வுக்குரியதுதான்.

ஒரு அரசாங்கம், சட்டம் இயற்றும் சட்டமன்றம், அதை அமுல் நடத்திவைக்கும் நிர்வாக இலாக்கா, சட்டத்தை நிறைவேற்றி வைப்பதிலே நீதி வழங்கப்பட்டிருக்கிறதா என்று ஆய்ந்து பார்த்து, ஏற்ற நீதியைக்கூறும் நீதி இலாக்கா, ஆகிய மூன்றுவித அமைப்புகளால் ஆனதாகும். சட்டமன்றம் இயற்றித்தரும் சட்டங்களின் வழிநின்றுதான், நிர்வாக இலாக்காவும், நீதி இலாக்காவும் வேலை செய்யவேண்டும்.

நிர்வாகத்தை அமுல் நடத்தும் ஒரு அதிகாரியே, நீதியை வழங்கும் அதிகாரியாக இருந்து விடுவாரானால், அத்தகைய ஒரு அதிகாரியிடம் நேரிய நீதியை அடைய முடியாமல் போய்விடும்—அப்படியே அடைய முடியாமல் போய்விட்டிருக்கிறது. நிர்வாகம் செலுத்தும் அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரமும், சப்மாஜிஸ்ட்ரேட், கலெக்டர் போன்றோர்க்கு ஒன்றாக இணைத்து இது வரையில் கொடுக்கப்பட்டிருந்தன. அப்படி இருவித அதிகாரங்களும் ஒருவரிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கும் காரணத்தால், பல குறைபாடுகள் நீதி பெறுவதிலே ஏற்பட்டு விடுகின்றன என்பதைப் பலரும் சுட்டிக்காட்டி வந்தனர். அதன் விளைவாகப் பிரிவினை செய்யும் பணி இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

நிர்வாகம் செலுத்துவோர் ஒருவராகவும், நீதி வழங்குவோர் வேறொருவராகவும் இருந்தால்தான், ஓரளவுக்ாவது நியாயம் பெற வழி ஏற்படும். நீதி வழங்கும் நீதிபதிகள், நிர்வாகம் செலுத்துவோர்க்கு எவ்விதத்திலும் கட்டுப்படாமலிருந்தால்தான், விருப்பு வெறுப்பற்ற நீதியை, நீதிபதிகளால் வழங்க ஏதுவாக இருக்கும். நீதிபதிகளுக்குச் சட்டம் இயற்றுவோராலும் தொல்லைகள் இருக்கக் கூடாது, நிர்வாக அதிகாரிகளாலும் தொல்லைகள் இழைக்கப்படக்கூடாது.

நீதி-நிர்வாகப் பிரிவினை எவ்விதத்தில் கடைப்பிடிக்கப்பட்டால், பிரிவினையால் பலன் ஏற்படக்கூடும் என்பதைச் சென்னை உயர் நீதி மன்ற பிரதம நீதிபதி தோழர் ராஜமன்னார் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"நீதி இலாக்கா சுயேச்சையானதாக இருந்தால், நிர்வாக அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது என்பது ஜனநாயகத் தத்துவமாகும். நீதி வழங்குபவர்கள், பிற்பாடு என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைப்பற்றிப் பயப்படக் கூடாது. நீதிபதிகளின் தீர்ப்புகள் நிர்வாகத்தினரால் எவ்வித்திலும் பாதிக்கப்படாததாக இருக்கவேண்டும் தங்கள் கடமைகளை நீதிபதிகள் செய்வதால் வேலையைவிட்டுநீக்கப்படுவது அல்லது பதவிஉயர்வுகள் நிறுத்தப்படுவது போன்ற எதுவும் அவர்களைப் பாதிக்கக் கூடாது"

என்று கூறியுள்ளார். இத்தக் கூற்றுக்களை ஆட்சிபுரிவோர் தெளிவுற அறிந்து செயலாற்ற முற்படவேண்டும்.

ஆளவந்தார்களுக்குஒன்றை அறிவுறுத்த விரும்புகிறோம். சட்டம் இயற்றும்அரசாங்கம், மக்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய சட்டங்களை இயற்றிக்கொண்டே இருந்து, நீதி-நிர்வாகப் பிரிவினை ஏற்பட்டாலும் ஒன்றுதான், ஏற்படாமலிருந்தாலும் ஒன்றுதான். 'ஆட்கொல்லிச் சட்டங்களை' அடுத்தடுத்து இயற்றிக்கொண்டே இன்றைய அரசாங்கம் இருப்பதால்தான், நீதி-நிர்வாகப்பிரிவினையால், எதிர்பார்க்கும் பலன்கிடைக்குமா என்ற ஐயப்பாடு எழுகின்றது. எல்லாவற்றையும் விட மிக முக்கியம் நீதி இலாக்காவிலும், நிர்வாக இலாக்காவிலும் ஆளவந்தார்கள் தங்கள் சொந்த அதிகாரத்தை முறையல்லாத வழியில் புகுத்தி, ஆணை செலுத்தாமலிருப்பதுதான். மக்களின் உரிமைகளைப் பறிக்காமல், பாதுகாக்கும் சட்டங்களை இயற்றி, நீதி—நிர்வாகப் பிரிவினையைச் செம்மையுற அமுல் நடத்த ஆளவந்தார்கள் முனையவேண்டும். முனைவார்களா? என்னவோ, நீதி-நிர்வாகத்தைப் பிரித்துவிட்டார்கள்! அந்த மட்டில் மகிழ்ச்சிதான்!

# உலக்கூடம்

[ 'சம்மட்டி' ]

## புதிய காஷ்மீர் பிரச்சினை!

இந்தியாவிற்கும் — பாக்கிஸ்தானுக்கும் இருக்கும் நாடு பிடிக்கும் ஆசையின் விளைவுதான் காஷ்மீர்பிரச்னை! சம்மந்தப்பட்ட மக்களின் ஒப்புதலைப்பெற்றுப் 'பிரச்சினை'யைத் தீர்த்துகொள்ள வேண்டியதிருக்க, இரு நாடுகளும் கூடிப் பேசும் கட்டத்தைக் கடந்து, தங்கள் தங்களுக்குச் சாதகமானபடியாட்களைப் பிடித்துக்கொண்டு, களத்திலே கைவரிசையைக்காட்டிக்கொண்டு இருக்கின்றன. ஐக்கியநாடு சபையிலும், இதுபற்றிய வம்பளப்பும் நடந்தது; 'பிரச்சினை' காஷ்மீரை சுற்றிப் பார்த்துவிட்டு, ஐக்கிய நாடு சபைக்கே மறுபடியும் நுழையக்காத்துக்கொண்டுஇருக்கிறது!

இந்த நிலையில், 'புதிய காஷ்மீர்' பிரச்சினை ஒன்று கிளம்பிவிட்டு இருக்கிறது. இரு சுதந்திர அரசுகளுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபத்தின் விளைவல்ல இது. நாடு பிடிக்கும் பேராசையும் இதில் இருக்கவில்லை. ஆனால், ஆதிக்க வெறி மட்டும் நிரம்ப இருக்கிறது!

ஏதோ, இந்து மதக்கலாசாரமென்ற மார்க்க காலத்து மண்டூகங்கள் போல, சதாசர்வகாலமும் கத்திக்கொண்டு கிடக்கிற துகளே சில, அதுகள் கவனித்துப் பார்க்க வேண்டிய 'புதிய காஷ்மீர்'பிரச்சினை இது. 'ஹிந்து சாம்ராஜ்யம்' என்ற கனவை, மனச் சிறையில் பூட்டிவைத்துக் கொண்டு, பலாத்காரத்தையே பஜித்துக்கொண்டு, இவ்வளவையும் மறைக்க, இந்துமதக் கலாசாரப் பண்பாடு வளரப் பாடுபடுவது ஒன்றேதான், தம் குறிக்கோள் என்று கூறித் திரிகிறதுகளே ரா.சு.சே.க்கள், அதுகள் முகங்களிலும், இந்தப் 'புதிய காஷ்மீர்' கரியைத் தடவுகிறது!

பெரிய பரபரப்பு ஏற்படுத்திவிட்டிருக்கிறதாம், இந்தப் 'புதிய காஷ்மீர்' பிரச்சினை! திருப்பதி க்ஷேத்திரமே நிலைகுலைந்து போயிருக்கிறதாம்! எல்லா வினைகளையும் தீர்த்துவைக்கும் திருவேங்கடத்தான், இந்தக் கொந்தளிப்பைத் தீர்த்துவைக்க முடியாமல், திருவிழிகளில், திருநீர் பெருக்குகிறாராம்!

கமிஷனரின் புதிய கட்டளை, அதை எதிர்த்து ஒரு கூட்டத்தின் கூச்சல், அதுகண்டு மற்றொரு சாராரின் பாய்ச்சல், மந்திரிக்குக் காவடி, என்ற முறையில் ஹிந்து கலாசாரம் வேங்கடமலையில் வெத்து வேட்டுகளைக் கிளப்பிக்கொண்டு இருக்கிறது! இனி டில்லிக்கு, எந்த கூட்டத்தினர், படையெடுக்கக் காத்துக்கொண்டு இருக்கிறார்களோ? அதற்கு எதிர் நடவடிக்கையாக, ஐக்கிய நாடு சபைக்கு எவர் மனு செய்து கொள்வதென்று முடிவிற்கு வந்து இருக்கிறார்களோ?

கொடி இறங்கினதும், பெருமாள் சிலைக்குச் செய்யவேண்டிய அலங்காரங்களுக்கு முன்பாக அர்ச்சகர்களுக்கு மரியாதை செய்வதா, பின்பு செய்வதா என்பதுதான் எழுந்துள்ள நெருக்கடியான பிரச்சினை! அர்ச்சகர்கள் 'தென்கலை'யைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு எதிரியாக இருக்கும் ஜீயர் 'வடகலை'யைச் சேர்ந்தவர். தகராறு வளர்ந்து, அமைச்சருக்கு, அர்ச்சகர்கள், தந்திமூலம் மனு அனுப்பி உள்ளார்கள். கமிட்டிக் கூட்ட விஷய அட்டவணையில் ஏற்கனவே இந்தப் பிரச்சினை சேர்க்கப்படாமலிருந்தும்கூட, தேவஸ்தானக் கமிட்டித் தலைவர், வேங்கிடசாமி நாயுடு அவர்கள், ஜீயரின் ஆட்சேபனை மனுவை ஏற்றுக்கொண்டு, ஜீயருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்துவிட்டாராம்! அவ்வளவுதான! எவ்வளவு முக்கியமான பிரச்சினை! 'புதிய காஷ்மீர்' பிரச்சினை என்று, இதனைக் கூறுவது பொருந்தாதா? ஹிந்து மதக் கலாசார விஷவாடை அடிக்கிறது! மூக்கைப் பொத்திக்கொள்ளுங்கள்!

* * *

## சர்க்கார் சாதனை!

காங்கிரஸ் சர்க்கார் ஒன்றுமே செய்வதில்லை என்று குற்றம் சாட்டுகிறார்களே, சில 'விஷமிகள்', அவர்கள் இனிக் கட்டாயமாக வாயடைத்துக் கிடக்க வேண்டியதுதான்.

இந்தியப்பிரதமர், அமெரிக்கா செல்லுகிறபொழுது, அவ்விடத்தில், இரண்டாண்டுகளாகக் காங்கிரஸ் சர்க்கார் சாதித்துள்ள சாதனைகளின் பட்டியலைத் தரத்தான் போகிறார். இந்த அரும்பெரும் சாதனையையும், அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்வதுதான் சிலாக்கியம். அந்தச் சாதனை, அமெரிக்க அரசாங்கம் தெரிந்துகொண்டால் தங்கள் நாட்டிலகூட, அதுபோல அமைக்க வேண்டுமென முடிவிற்கு வந்து, ஐந்தாறு சூண்டல் சீமான்களை, நேரில் சென்று பார்த்து, அது பற்றி அறிக்கை ஒன்று தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்வதின்மூலம், இருநாடுகளுக்கும் அதிகக் கலாசார ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ள முனைந்தாலும் முனைவர் அமெரிக்கா.

அந்த மகத்தான சாதனை, அமெரிக்கவே கண்டு வியக்கும் சாதனை! என்ன என்று கேட்கிறீர்களா? இதோ பாருங்கள், புதுமாதிரியான சிறைச்சாலை ஒன்றை ஐக்கிய மாகாண சர்க்கார் 'முன்மாதிரியாக'க் கட்டி முடித்திருக்கிறதாம். 'குடும்பப் பெருமை — அந்தஸ்து—குற்றநிலை,-ஆகியவற்றைக் கவனித்து குற்றவாளிகளை, அச்சிறையில் அடைக்கப்படுமாம்! இது வெற்றிபெற்றால் மற்ற மாகாணங்களும் இதனைப் பின்பற்றுமென்றும் நம்பப்படுகிறதாம்! பார்த்தீர்களா எவ்வளவு பெரிய சாதனை? இதுபோல வேறு எந்த நாடாவது, இவ்வளவு குறுகிய காலத்தில் சாதித்திருக்கின்றனவா? கூறுங்கள் பார்ப்போம்! இத்துணைக்கண்டமே கொடும் சிறைச்சாலையாக இருக்கிறது! அதனைப்போக்க முனவராமல், சிறைச்சாலையிலே மனுசாஸ்திரியாரைக் குடியேற்றுவது முறையா?—தேவையா?

## எவ்வளவு சக்தியப்பா!

'இந்தக் காளி ரொம்ப சக்தி வாய்ந்தவளப்பா! இவளைக் கும்பிட்டால் சகல குறைகளும் சர்வ நாசமடையுமப்பா!' என்றான் ஒரு பக்தன்.

'கேளடா முட்டாளே! சேலத்தில் இருக்கிற தம்மம்பட்டி கிராமத்தில், மாரியம்மன் அண்டு செல்லம்மன் தேவஸ்தானக் கம்பெனிஒன்று இருக்கிறதடா! அந்த மகேஸ்வரிகளுக்குத் திருவிழா நடக்கவேண்டி இருந்ததாம். ஆனால், அந்தத் தேவதைக் கம்பெனிகளின் தர்மகர்த்தர்களுக்கும், உள்ளூரில் சிலருக்கும் மனக்கசப்பு முற்றிப்போயிருந்ததாம். மாகாளிகளுக்கு பூஜைபோட்டால் மக்கள் மண்டை உருள வேண்டிவருமோ என்றுபயந்து, மாஜிஸ்டிரேட், 25 நாட்களுக்கு மாதாக்களின் விழாவிற்கு 144 தடையுத்திரவு போட்டுத், திருவிழா நடத்தக்கூடாது என்று தடுத்துவிட்டாராம்! பார்த்தாயடா, மாகாளிக் கம்பெனியின் மகிமையை! 144-க்கு பயப்படுகிறதடா, நம்ம மாகாளிகள்! மாகாளி மட்டுமென்று நினைக்கிறாய், மகேஸ்வரன்கூட 144-க்கு முன்னால் ஒன்றும் செய்ய முடியாதுடா!'

'திருசூலங்களைக் கரங்களிலே வைத்துக்கொண்டிருந்த போதிலும், தங்களுக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவுகளையே தகர்த்தெறியமுடியாத பத்திரகாளிகளால், துன்புறுத்தும் வினைகளில் இருந்து, எப்படியடா, என்னைக் காப்பாற்ற முடியும்! இதுகளை நம்பி நம்பி நாசமாகப் போனேனடா, இது நாள்வரை! என் கண்களைத் திறந்துவைத்த, 144 தடையுத்தரவே, உனக்கு ஒரு தண்டம்!'

## தி. மு. கழகம்-நுங்கம்பாக்கம்

சென்னை, அக். 3—

தி. மு. கழகம்—நுங்கம்பாக்கம் கிளையின் செயற்குழு கூட்டம் 2—10—49ல் நடைபெற்றது. அக்டோபர் திங்கள் 28, 29, 30 ஏதாவது ஒரு நாளில் துவக்க விழாவை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் தோழர் ச. பாலசுந்தரம் அறிவிக்கிறார்.

## கழகக் கொடி

விழுப்புரத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகளைத் தைத்துக்கொள்ள விரும்புவோர், கீழ்க்கண்ட முகவரியில் இலவசமாகத் தைத்துக்கொள்ளலாம்.

முகவரி:-

கே. பி. நம்மாழ்வார்,
தையல் நிலையம்,
124, பாண்டி ரோடு,
பீம நாய்க்கன் தோப்பு,
விழுப்புரம்.

# இந்தியாவின் உழவுத்தொழிலைப் பெருக்க $4\frac{3}{4}$ கோடி ரூபாய்

கடந்த ஆறுவார காலத்திற்குள் உலக பாங்கியிடமிருந்து இந்தியா இரண்டாவது முறையாக 4 கோடியே 76 லட்சம் ரூபாய் (ஒரு கோடி டாலர்) கடன் வாங்கியிருக்கிறது.

இதற்கு முன் ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று முதன் முறையாக இந்தியா 3 கோடியே 40 லட்சம் டாலர் கடன் வாங்கியது.

முதலில் வாங்கிய கடன்தொகை இந்திய ரயில்வே அபிவிருத்திக்காக செலவிட வாங்கப்பட்டது. இதற்கு 3 சதவிகிதம் வட்டி. ஒருசதவிகிதம் தாகு.

இரண்டாவதாக வாங்கிய கடன், உழவுத் தொழிலை அபிவிருத்தியடையச்செய்து உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்கி, உணவுக் குறையைப் போக்குவதற்காகவாம். இதற்கு $2\frac{1}{2}$ சதவிகிதம் வட்டி. ஒரு சதவிகிதம் தாகு. இந்தக்கடன 7 ஆண்டுத் தவணையில் திருப்பித் தரப்படவேண்டும். 1952 ஜூன் முதல் பணம் கட்டிவரவேண்டும்.

உணவுத் தொழிலை விருத்தி செய்வதற்கான, இந்த இரண்டாவது கடன் தொகைக் கணக்கில் 375 கனத்த "டிராக்டர்கள்-இயந்திரங்கள் அமெரிக்காவிலிருந்து வந்து இறங்கும். இவற்றைக்கொண்டு வட இந்தியாவில 30 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் பயிர் விளையும் நிலங்களாக்கப்படுமாம். இவற்றின் மூலம் அரசாங்கம் 40 லட்சம் டன் தானியங்களை எதிர்பார்க்கிறது. இதுதவிர, வட இந்தியாவில் ஒரு லட்சம் ஏக்கர் காடுகளை அழித்து விளைவிடமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னிந்தியா பற்றி என்ன? ரயில்வே அபிவிருத்திக்கென வாங்கப்பட்ட கடன்தொகையில, தென்னிந்தியாவில எத்தனை புதியபாதைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றன எத்தனை ஸ்டேஷன்கள் புதுப்பிக்கப்படும்? ரயில வண்டிகளின் நிலைமையாவது சீர் செய்யப்படுமா? என்ற ஐயங்கள் போக வழியில்லை. பிற அவசர காரியங்களை முன்னிட்டு, இப்போதுபுதிதாக தென் இந்தியாவில் ரயில்வே வேலைகள் ஒன்றும் செய்வதற்கில்லை என்றே பட்டவர்த்தனமாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

உழவுத் துறையிலோ, தென்னாட்டிலுள்ள காடுகளை அழித்து விளை நிலங்களாக்கவோ, தரிசு நிலங்களைப் பயிரிடவோ எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? வேலை என்று தொடங்கும்? இப்பெரும் கடன் தொகைகளால தென்னாட்டவருக்குப் பலன் உண்டா? என்ற கேள்விகள் தக்க விடை பெறும் என்று கருதுவதற்கில்லை எனத் தெரிகிறது.

இவ்விரண்டும் தவிர, மூன்றாவது முறையாக மற்றோர் கடன் தொகை வாங்கவும் இந்தியா முயன்று கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எத்தனை முறை கடன் வாங்கினாலும், கடன் தொகைப் பொறுப்பில பங்கு பெறற்கு வேண்டிய தென்னாடு, பலனிலும், சரிபங்கு பெற்றுத் தீரவேண்டுமென்பதை மத்திய அரசாங்கம் தானாகவே அறியாவிடினும், அறியுமாறு அதனைச் செய்ய வேண்டியது சென்னை மாநில அரசாங்கத்தாரின் கடமையல்லவா? உரிய காலத்தில் செய்யத் துணிவுமா? நம ஆட்சிப் பீடம்!

# அமெரிக்காவில் ஆரம்பப் பள்ளி



அமெரிக்காவில் தென் வர்ஜினியா ஸ்டேட்டில் பார்லிங்டன் என்ற இடத்திலுள்ள ஒரு ஆரம்பப் பாடசாலையின் தோற்றமே படத்தில் காணப்படுவதாகும். இம்மாதிரியான பாடசாலைகளில் புதிய காலத்திற்கேற்ற சாதனங்கள் அனைத்தும் அமைக்கப்பட்டு, பல்வேறு துறை அறிவையும் இளம் மாணவர்கள் அறிந்துகொள்ளும் முறையில் வசதிகளும் செய்து தரப்பட்டிருக்கின்றன.

# குபேர நாட்டிலும்...

[1-ம பக்கத் தொடர்ச்சி]

பாட்டை எடுத்துக் காட்டுகிறோம்.

* *

5,28,000 உருக்குத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள், தொழிலாளர் சங்கத்தலைவரின் கட்டளைப்படி. தொழிலாளர்களுக்குப் பென்ஷனும் இன்ஷூரன்சும் வழங்க வேண்டுமென்று, தொழிலாளர் குறைபாடுகளைக் களைய நியமித்தக் குழு சிபாரசு செய்திருந்தது. அதற்கான முழுத் தொகையை முதலாளிகளே தரவேண்டும் என்று தொழிலாளர்கள் கோருகிறார்கள். முதலாளிகள், இதற்கு இணங்க மறுக்கிறார்கள். வேலை நிறுத்தம் விளைவாகிறது. அடக்குமுறை இருக்கிறது. அமெரிக்க ஆள வந்தார்களும் இருக்கிறார்கள்!

குபேர நாட்டில் வேலையின்மை இருக்கிறது—வளர்ந்து கொண்டும் இருக்கிறது—தொழிலாளர்களுக்குக் குறைபாடுகள் இருக்கிறது — வேலை நிறுத்தம் நடக்கிறது — சர்க்கார் விழிக்கிறது. அமெரிக்காவில்தான இந்த நிலை! எங்கே குறைபாடு? திட்டம் திருத்தப்பட்டு வேறு திட்டம் தீட்டப்படவேண்டியது முக்கியமல்லவா? 'முரண்பாடு இல்லாதத்திட்டம்' எது? தீர்ப்பு நீங்கள்தாருங்கள் தீர யோசித்து!

# யோகம் - கற்காத நாட்டில் முதுமையிலும் இளமை குன்றாதிருக்கவழி

## யோகிகள் நிறைந்த இந்நாடு பிணி மலிந்து கிடக்கிறது

"காசம் க்ஷயம், ரத்தபுத்தளர்ச்சி போன்ற எத்தகைய நோய்களையும் யோகத்தின் மூலம் தீர்த்துவிடலாம். மருந்துகளோ ஆபரேஷன்களோ தேவையில்லை. எனவே, இவற்றைப் பள்ளிகளிலும் கலாசாலைகளிலும் கற்பிக்க வேண்டும்" என்று கூறி அரசாங்கத்தின் உதவியை நாடுகிறார் ஒருயோகி,

இந்தயோகி, தமயோகா சிரமத்தைப் பெங்களூரில் அமைத்துக் கொண்டிருக்கிறார். குவாலியா மாராஜா, மைசூர் முன்னாள் ரெசிடெண்ட் முதலியோர் இக்கலையை இந்த யோகியிடம பயின்றனராம. ஆனால் மைசூரிலும், குவாலியரிலும் யோகா சிரமங்கள் வைத்து நோய்கள் போக்கப்படவில்லை. பெரிய பெரிய ஆஸ்பத்திரிகள் வைத்துத்தான், பெரிய மருத்துவர்கள் இருந்து சிகிச்சை செய்துதான் நோயைப் போக்குகின்றனர்.

யோகம் தெரியாத, யோகிகள் இல்லாத ரஷ்யாவில்தான் மக்கள் 120 ஆண்டுகள்வரை வாழவும், முதுமையிலும் இளமை குன்றாமல இருக்கவும் வழிகண்டனர்.

யோகிகள் இல்லாத மேனாடுகளில்மரணவிகிதமகுறைந்துமனித வாழ்க்கைக்காலம இந்தியாவிலிருப்பதைவிடநீண்டதாயிருக்கிறது.

ஆனால் இந்தியாவில் யோகிகள் மிகுதி. யோகாசிரமங்கள் பல உண்டு. யோகசாஸ்திரங்கள் சந்தைக்கடையில் மலிந்து கிடக்கின்றன. யோகத்தைப் பற்றி வானளாவப் பேசுவோர் பலர். பலன் யாதெனின், மக்கள், பிணிகள் விதவிதமாக வந்து உயிரைப் பற்றுகின்றன. சென்னையிலிருந்த பிரபலயோகி தோழர் சிவசங்கரன் என்பார் 40 ஆண்டுகளில உயிர் துறந்தார். இவ்வாறாக யோகம சிறந்த இந்நாடு பிணிமலிந்த நாடாக மிளிர்கிறது.

இந்த அழகில, யோகத்திற்கு அரசாங்க ஆதரவு கோரப் படுகிறது. யோகத்திற்கு உண்மையில நோய் போக்கும் சக்தியிருந்தால, இந்நாட்டில ஓர் ஆஸ்பத்திரியையும் விட்டு வைக்காமல ஒரு டாக்டரையும் இருக்க விடாமல ஒழித்துவிட்டு, எல்லாவற்றையும் யோகமயமாக்கி விடலாமே. இந்நாட்டிலே யோகப் பேச்சு பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து பேசப்படும் பேச்சு. இது மகரிஷிகள், மகான்களின் கலை எனப்படுகிறது. ஆனால் இந்த மகரிஷிகள், மகான்கள் யோகம பேசிய காலத்தில்தான், ஆயுர்வேதம போன்ற வைத்திய நூலகளும், சிகிச்சை முறைகளும் இருந்து வந்தன.

எனவே, யோகம், சித்தி என்பவைகளெல்லாம அழகான ஏட்டுக்கலை. இதனை நடை முறையில கொண்டுவர அரசாங்கம் ஆதரவு தருவதென்பது வீணவேலையாகவும் கையாண்டிச் செயலாகவுமே முடியும் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

## அறிவிப்பு

புதுக்கோட்டையில் "மாலை மணி" கிடைக்குமிடம

ரா. அருணாசலம்

(போலீஸ் ஸ்டேஷன சமீபம்)

புதுக்கோட்டை.

# அகில உலகமும் விரும்புவது போர் அல்ல அமைதியே

(0)

# காமன்வெல்த் கூட்டுறவு இந்தியாவிற்கு வேண்டவே வேண்டாம்

## ஜனநாயக சமாதான சக்திகளின் ஐக்கிய முன்னணி வேண்டும்

### சென்னை அகில உலக அமைதி மாநாடு

சென்னை, அக். 3—

"உலக அமைதி மாநாடு" நேற்று 2—10—49 ஞாயிறு காலை 9-மணிக்குச் சென்னை கோகலே மண்டபத்தில் தோழர் வி. சக்கரை அவர்கள் தலைமையில் சிறப்புற நடந்தேறியது. மாநாட்டிற்குப் பல்வேறு தொழிலாளர்களும், மாணவர்களும், பிற இளைஞர்களும், பொதுமக்களும ஏராளமாக வந்து குழுமியிருந்தனர். மண்டபத்தில, கீழ் பகுதியிலும், மேல்மாடியிலும் இடமில்லாத அளவில் பெருவாரியாக நெருக்கிக்கொண்டு நிரம்பியிருந்தனர்.

மாநாட்டிற்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையில தோழர் சி.வி. இராசகோபாலர், மாநாட்டின் நோக்கத்தை விளக்கிக் கூறினார்கள். இன்றைய உலகில் அமெரிக்கா-ரஷ்யா என்ற இரு பெரும் சக்திகள் பிரிந்து நிற்கின்றன என்றும், அமெரிக்கா போர்முழக்கங்களை எழுப்பிக்கொண்டு பிற முற்போக்குச் சக்திகளை அழித்துவிட எண்ணுகிறது என்றும், இந்த நிலையை உணராமுடியாத வகையில் இந்தியா அமெரிக்காவுக்கு ஆதரவு தர முனைந்திருக்கிறது என்றும், இனியொரு பெரும் போரை ஏழை மக்களாகிய நாம் எல்லோரும் விரும்பவில்லை என்பதை அகில உலகத்திற்கும் தெரிவித்து, சமாதானத்தை நாம நிலைநாட்ட வேண்டும் என்றும கூறினார்.

பின்பு தோழர் வி. சக்கரை அவர்கள் தலைமை வகித்து இன்றைய உலகியல நிலையைத் தெளிவாக விளக்கினார். அமெரிக்கா, முதலாளித்வ ஆதிக்கத்தை அகில உலகிலும செலுத்த ஆங்காங்கு ஆதரவு தேடிவருகிறதென்றும், அதற்கு இந்தியா இணங்கியிருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்றும கூறி, மக்கள் போரை விரும்பவில்லை, அமைதியையே நாடுகிறார்கள் என்பதை ஆதிக்கம் கொள்ள எண்ணுபவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும என்றும் கூறினார்.

அடுத்துத் தோழர்கள் வி. ஜி. ராவ, இளங்கோவன், இரா நெடுஞ்செழியன, காஞ்சி. கல்யாணசுந்தரம, குயிலன ஆகியோர் விரிவாகவும், தெளிவாகவும் சொற்பொழிவாற்றினார்கள்

இறுதியாகப் பின்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

"அணுகுண்டைத் தடை செய்து, ஆயுதப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டுமென்றும், அணுசக்தியை ஆக்க வேலைக்கே உபயோகப்படுத்துவதற்கு உத்திரவாதம் அளிக்கப்படவேண்டும் என்று இக்கூட்டம வற்புறுத்துகிறது.

இந்தியாவை யுத்த அணியில திணிக்கும் காமன்வெல்த் கூட்டுறவை இக்கூட்டம வன்மையாகக் கண்டிக்கிறது.

சமாதானத்திற்காகவும், சோஷலிஸத்திற்காகவும போராடும் உலக ஜனநாயக சமாதான, சக்திகளுடன் ஒன்றுபட்ட ஐக்கிய அணியிலேயே இந்திய மக்களாகிய நாம அணிவகுத்து நிற்போம என்று இக்கூட்டம உறுதி கூறுகிறது" என்பன வாகும.

தலைவர் முடிவுரைக்குப்பின, தோழர் சி. வி. இராசகோபாலர் நன்றி கூற மாநாடு பகல 11-30 மணிக்கு 'அட்லாண்டிக் ஒப்பந்தம் ஒழிக', 'காமன்வெல்த் கூட்டுறவு ஒழிக', 'உலக சமாதானம நிலைக்க' என்ற முழக்கங்களோடு இனிது கலைந்தது.

# இனி நடப்பவை

மணக்கால்(லால்குடி)-தி. கழகப் பொதுசசெயற்குழுக் கூட்டம 7-10-49 வெள்ளிமாலை 7மணிக்கு, தோழர் ம. கி. சோமசுந்தரம் இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம கழகக் கணக்குவழக்குகள் பார்த்து முடிவு செய்யவேண்டியிருப்பதால், டை யூர் செயற்குழு உறுப்பினர்கள மட்டும கலந்து கொள்ளுமாறுத் தோழர் எம். பகவதி வேண்டிக் கொள்கிறார்.

* * *

மணக்கால (லால்குடி).9-10-49 ஞாயிறு மாலை 7 மணிக்கு இவ்வூர் பஜனை மடத்தில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தேர்தல நடைபெறும். அவ்வமயம் தி. மு. கழகத்தினருக்கு உறுப்பினர்கள சேர்க்கும முறையும், செயற்குழு அமைத்தலும மற்ற கழகச்சட்ட திட்டங்கள் பற்றியும ஆலோசித்து முடிவு செய்யப்படும். டையூர் திராவிடத்தோழர்கள் அனைவரும கலந்து கொள்ளுமாறு தோழர் பகவதி வேண்டுகிறார்.

## தபால் தந்தி ஊழியர்கள் கோரிக்கை

சென்னை, செப். 20

தபால் தந்தி ஊழியர் சங்கத்தின் மாகாண மாநாடு செப்டம்பர் 25, 26 தேதிகளில் வேலூர் மகந்த் உயர்நிலைப்பள்ளியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மாகாணத்தின் பல்வேறுப் பகுதிகளிலிருந்து 200 பிரதிநிதிகள் வந்திருந்தனர். வேலூர்கோட்டைதபால் நிலயத்திலிருந்து ஊர்வலமாக பிரதிநிதிகளும் மற்ற தபால் ஊழியர்களும் பல தெருக்கள் வழியாக கோரிக்கைகள் பொறித்த அட்டைகளைப் பிடித்துக்கொண்டு, 'எங்கள் தலைவர்களை விடுதலை செய்', 'நீக்கிய தொழிலாளர்களுக்கு வேலைகொடு', 'விலைவாசிகளை கட்டுப்படுத்து', "அடக்கு முறை ஒழிக', 'ஆட்குறைப்பு செய்யாதே', தொழிலாளர் தேவைகளைப் பூர்த்தி செய்' ஆகிய கோஷங்களை தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுப்பிக் கொண்டு சென்று மகத் பள்ளியில் வந்து கூடினார்கள். தபால் தந்தி குமாஸ்தாக்கள் சென்னைமாகாணத்தில் முதல் முதலாக நடத்திய மாபெரும் ஊர்வலம் இதுதான். பிறகு மாநாடு இரயில்வே பெடெரேஷன் பொதுக்காரியதரிசி எஸ். குருசாமி தலைமையில் நடைபெற்றது. சென்னை கிருத்துவக் கல்லூரி ஆசிரியர் சந்திரன் தேவநேசன் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

தற்காலிகமாக பல ஆண்டுகளாக வேலை செய்யும் ஊழியர்களை உடனே அவர்கள் ஸர்வீஸைக்கேற்ப ஸதிரப் படுத்த வேண்டுமென்றும், 15—8—47 க்கு மேல் வேலையில் அமர்த்திய தற்காலிக ஊழியர்களுக்கு மறு பரீட்சை ஒன்றும் வைக்கக் கூடாதென்றும், 1931-ம் வருடத்திற்கு முன்னே உள்ள ஊழியர்களுக்கும் பின்னே வேலையில் அமர்த்தப்பட்டவர்களுக்கும் சம்பள நிர்ணயிப்பிலுள்ள குறைகளை நீக்க வேண்டுமென்றும், போர்க்களத்திலிருந்து திரும்பிய ஊழியர்களுக்கு தகுந்த சலுகைகள் காட்டவேண்டுமென்றும், சம்பளக் கமிஷன், திறமையாளர் கமிட்டி (Experts Committee) ஆகியோரின் மற்ற நன்மையக்கும் சிபார்சுகளை உடனே அமுலுக்குக்கொண்டு வரவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் கீழ்க்காணும் சங்க நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்:-எஸ். குருசாமி பி. ஏ., உப தலைவர்:— ஏ. பி. துளசிராம், பொது அமைச்சர்:—கி. இராமமூர்த்தி பி.எஸ்.ஸி., உதவிப்பொது அமைச்சர்:-செ. மா. பர்பூரண பி. ஏ., அமைப்புப்பணி அமைச்சர்:-எம். ஏ. ஜபார், பொருள் காப்பாளர்:-டி. பாபு (ஒ-சி)

## பாரதி விழா

சென்னை, செப். 28—

சென்னை ஆல்தோட்டம் அண்ட நிலயத்தில், மாணவர் சொற்பயிற்சிக் கழகத்தின் ஆதரவில் பாரதி விழா கொண்டாடப்பட்டது. தோழர் பி. முனுசாமி தலைமை வகித்தார். தோழர் ஏ. துரைராஜ் பாரதியார் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். தோழர் சி. என். சாமுவேல் "பாரதியும், பாரதிதாசனும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். மற்றும் பலர் பேசினர். எனத் தோழர் ஏகாந்தம் எழுதுகிறார்.

## "செல்வராசன்" தோற்றம்

மதுரை, செப். 30.—

மதுரைத் தோழியர் சோலையப்பன் செல்வம் அவர்கட்கு 47-8-59 அன்று பிறந்த ஆண் குழந்தைக்கு செல்வராசன் எனப் பெயரிடப் பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர்]

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

### பேராவூரணி—கிளை

பேராவூரணி, செப். 30—

29—9—49-ல் பேராவூரணி பகுத்தறிவுப் படிப்பகத்தில் தோழர் எஸ். சூரிய மூர்த்தி அவர்கள் தலைமையில், திராவிடர் கழக உறுப்பினர்கள் கூடி, திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தார்கள். செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கு அடைக்கலம். துணைச் செயலாளர்:—ரெ. வேலுக்கண்ணு. பொருள் உறுப்பினர்:—எஸ். துரைராசு, விளம்பர உறுப்பினர்:—ரெ. வேலுசசாமி

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—எஸ். சூரிய மூர்த்தி, என். நைனு முகம்மது, என். வேலு, கே. மாணிக்கம், என். கோதண்டபாணி, வி. விநாயகமூர்த்தி, பி. வடிவேல், எம். கே. கணேசன், ஆர். தங்கராஜு, டி. அருணாசலம், என். பொன்னப்பன், என். சக்ரபாணி, வீ. கணேசன்.

சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. எனச் செயலாளர் அறிவிக்கிறார்

* * *

### ஜேடர்பாளையம்—கிளை

ஜேடர்பாளையம், செப் 30—

30—9—49 அன்று ஜேடர்பாளையத்தில் கழக முக்கியஸ்தர்களும், அனுதாபிகளும் தோழர் ர. சென்னி தலைமையில் கூடி திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தனர். நிர்வாகிகளும், செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- வி. சந்தசாமி, துணைச் செயலாளர் - க. கோவிந்தன், விளம்பர உறுப்பினர் - என். இராமச்சந்திரன்; பொருளாளர்—ஆர். என். கோவிந்தராசன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்: தோழர்கள் என். இராமதாஸ், கிருஷ்ணராசு, ர. சென்னி. நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்ததெனத் தோழர் இராமச்சந்திரன் எழுதுகிறார்.

* * *

### நாகை—கிளை

நாகை, செப். 28 9-49—

மாலை 6-மணிக்கு, தோழர் கே. பாப்பையன் அவர்கள் இல்லத்தில், உயர் திரு. வி. டி. ராஜன் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கிளைக் கழகத்தின் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—நாகை. கோ. இராதாமணாளன், துணைச்செயலாளர்:— கோ. தர்மலிங்கம் பொருள் உறுப்பினர்:— வி. டி. ராஜன், விளம்பர உறுப்பினர்:— சு. முத்து.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—சா. பெ. ஜெயராமன், எஸ். சிவப்பிரகாசம், ஏ.எஸ். பாண்டியன், ஏ. முத்தையன், கே. கன்னையன், எஸ். பி. சாமி, எம். உத்திராபதி, பி. கோவிந்தசாமி, ப. சு. முத்தையன்; எம். காளிமுத்து, ஆர். வீராசாமி, ஏ. வேலாயுதம், வி. எஸ். பெருமாள், ஜி. ராஜகோபால், ஆர். சந்தானம். இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் கோ. இராதாமணாளன் எழுதுகிறார்.

* * *

### காரிமங்கலம்—கிளை

காரிமங்கலம், அக். 1—

இன்று மாலை 3 மணிக்கு இவ்வூர் தோழர் அமீர் அவர்கள் இல்லத்தில், தர்மபுரி தி.மு. க. செயலாளர் தோழர் குட்டியப்பன் தலைமையில் தி. மு. கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. மத்திய திராவிட முன்னேற்றக் கழகச் சட்டதிட்டங்களையும் கொடியையும் ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதிய செயற் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— கே. எஸ். அமீர் பொருள் உறுப்பினர்:— கே. கே. வில்லவன். விளம்பர உறுப்பினர் கே. ஜி. சுந்தரராவ்.

செயலாளர் நன்றி கூறக்கூட்டம் முடிந்தது. எனத் தோழர் அமீர் அறிவிக்கிறார்.

* * *

### பெரியார்பேட்டை (பெங்களூர்) -கிளை

பெரியார்பேட்டை, அக் 1—

பெரியார்பேட்டை (பெங்களூர்) கிளைத் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம், 28—9—49 அன்று தோழர் மணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரியார் செய்துகொண்ட திருமணம், கழகக் கொள்கைக்கு முற்றிலும் முரணாக இருப்பதால், அவர் தலைமையினின்று விலகி, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பணியாற்றுவதெனத் தீர்மானிக்கப் பட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம்" எனப் பெயர் மாற்றப் பட்டது. பின்பு புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-மணியம், பொருள் உறுப்பினர்:-தனபாலன், விளம்பர உறுப்பினர்:-கனகராசன்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் நால்வர் தெரிந்தெடுக்கப்பட்டனர். எனத் தோழர் ஆ. சு. மணி (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

### இலுப்பையூரணி-கிளை

இலுப்பையூரணி, செப். 30—

இலுப்பையூரணி கிராமப் பொதுச் சாவடியில் 30—9—49 ல் தோழர் ஆ. மாணிக்கம் தலைமையில், தி. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இன்றைய வரை திராவிடர் கழகம் என்றிருந்ததை, பெரியார் அவர்களின் பொருந்தாத் திருமணத்தின் விளைவாக, இனி அவர் தலைமையின் கீழ்த் தொண்டாற்ற இயலாதென்று கருதித் "திராவிட முன்னேற்றக் கழகம்" எனப் பெயரை மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. தோழர். எஸ். பி. முத்து முன்னேற்றக் கழக அமைப்பு முறைகளை விளக்கிப் பேசினர். புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-எம். ஆர். ஆர்தர் வில்லியம். பொருள் உறுப்பினர்கள்-ம. ச. தங்கவேலர், செ. சின்ன அய்யனு, மு. ஜெயராஜ். விளம்பர உறுப்பினர்-ஆ. மாணிக்கம்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்-ஜான் சாமுவேல், அய்யாத்துரை ச. பொன்னையா, அந்தரியா, காமாட்சாமி, தெய்வப் பிச்சை. எனத் தோழர் ஆர்தர் வில்லியம், (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

### நாகர்கோவில்—கிளை

நாகர்கோவில், செப் 30—

இன்று மாலை 4 மணிக்கு நாகர்கோவில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் ஏ. தேவசகாயம் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. கூட்டத்திற்குப் பல ஊர்களிலிருந்தும் சுமார் 50 க்கு மேற்பட்ட கழக அபிமானிகள் வந்திருந்தனர். அக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

(1) திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராவின் பொருந்தாத் திருமணத்தைக் கண்டிப்பதோடு, தன் போக்கை எதிர்த்தவர்களைத் தம் 'விடுதலை' மூலம் அடாத சொற்களால் தூற்றியும், பேசியும் வந்ததை இக் கூட்டம் கண்டிக்கிறது.

(2) 17—9—49 அன்று சென்னையில் கூடிய திராவிடர் கழக மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் பெரியார் தலைமையினின்றும் விலகி, "திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயரால் ஒரே இலட்சிய அடிப்படையில் பணியாற்ற முற்பட்டதை இக்கூட்டம் ஆதரிக்கிறது.

(3) இதுவரையில் திருவிதாங்கூரில் சென்னை மாகாணத்தில் உள்ளதைப் போல திராவிடர் கழகம் உருப்படியாக அமையாததால் 17—9—49ல் சென்னையில் கழக முக்கியஸ்தர்கள் செய்த முடிவுபடி "திராவிட முன்னேற்றக் கழகம்" அமைக்க இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(4) மத்திய தி. மு. கழக அமைப்பு முறைகள், கொள்கைகள், சட்டதிட்டங்கள், கொடி ஆகியவைகளை இக்கழகம் ஏற்றுக் கொள்கிறது.

(5) மத்திய தி. மு. கழகத்துடன் திருவாங்கூரையும் மாவட்டமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஷை கழகத்தை இக்கழகம் வேண்டிக் கொள்கிறது.

(6) நாகர் கோவில் நகர திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்குழு திருவாங்கூரில் ஊர்தோறும், கிளைக் கழகங்கள் அமைப்பதற்கு ஆவன செய்ய இக் கழகம் தீர்மானிக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவினர்- செயலாளர்- வி. எம். ஜான், பொருள் உறுப்பினர்- கே. சுப்பிரமணியம், விளம்பர உறுப்பினர்-கி. மனோகரன்.

ஏனைய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். என்பதாகத் தோழர் கி. மனோகரன் (விளம்பர உறுப்பினர்) அறிவிக்கிறார்.

* * *

### சலகண்டபுரம்—கிளை

சலகண்டபுரம், அக். 1—

28—9—49 இரவு 8 மணிக்கு தோழர் அ. மு. அண்ணாமலை அவர்கள் வீட்டில், திராவிட இயக்கத் தோழர்கள் கூட்டமொன்று நடைபெற்றது. அதில் 17—9—49 ல் சென்னையில் நடைபெற்ற இயக்கக் கூட்டத்தின் முடிவையேற்று, இவ்வூரில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. கழகச் செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் - ப. கண்ணன், துணைச் செயலாளர் - ர. கந்தசாமி, பொருள் உறுப்பினர் - அ. மு அண்ணாமலை, விளம்பர உறுப்பினர் மா. ஆறுமுகம்.

ஏனைய செயற் குழுவினர்களான கு சி. கந்தசாமி ர. அ. அண்ணாமலை, செ. சீனிவாசன் ஆகியோருடன், மேற்கொண்டும் சிலரைச் சேர்த்துக்கொள்ள உரிமையளிக்கப் பட்டது.

மறுநாள் 29—9—49-ல் நடைபெற்ற கூட்டத்தில் கழகத்திற்கென கட்டிட வாடகைக்காக ரூ. 15-ஐ அனுமதித்தும், 16—10—49 லிருந்து ஒரு வாரத்திற்குள் தி. மு. கழகத் துவக்க விழாவை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. எனத் தோழர் ப. கண்ணன் (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

### புதுக்கோட்டை—கிளை

புதுக்கோட்டை, அக். 2—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதுக்கோட்டை நகரக்கிளை, இன்று மாலை 5-30 மணிக்கு "பொன்னி" அலுவலக மாடியில் அமைக்கப்பட்டது. கீழ்க்கண்டபடி செயற்குழுவும் அமைக்கப் பெற்றது.

செயலாளர்:— அரு. பெரியண்ணன், துணைச்செயலாளர்:—கே. நாராயணன், பொருள் உறுப்பினர்:—க. ஞானமுத்து, விளம்பர உறுப்பினர்கள்—கு. அய்யாமணி, எஸ். முத்துவேல்.

ஏனைய செயற்குழுவினர்கள்:—

## ஆசிரியருக்கு முடங்கல்

### திருநல்வேலி ஜில்லா கைத்தறியாளர்களின் நிலைமை

ஐயா,

திருநெல்வேலி ஜில்லாவின் பெரும்பான்மையான மக்கள் கைக்கொண்டுள்ள முக்கிய தொழில் கைத்தறி நெசவுத்தொழில் இத்தொழிலை நம்பி பல லட்சக்கணக்கான மக்கள்வாழ்க்கை நடத்துகிறார்கள் ஆனால், இப்போது ஒரு ஆண்டு காலமாக நெசவுத்தொழிலாளர்கள் கூலிக்குறைவாலும், குறைந்த கூலிக்கு கூடப்பாவு நூல் கிடைக்காமலும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அகப்பட்டு, உணவுப் பொருள்களின் விலைவாசிகளின் உயர்வாலும் பாதிக்கப்பட்டு, குடும்ப வாழ்க்கையை நடத்த முடியாமல், பொருளாதார நெருக்கடியால் மனைவி மக்களுடன், பட்டினியால் பரிதபிக்கும் நிலைமை மிக பரிதாபகரமாக இருக்கிறது அனேக ஏழை நெசவாளர்கள் யாத்திரை வாசிகளாகக் கிளம்பி விட்டார்கள் கைத்தறி நெசவுத்தொழில் நாளுக்கு நாள் நலிந்து கொண்டே வருகிறது. தேசத்தின் ஜீவநாடியான பாட்டாளிகள் எலும்பும் தோலுமாய்க்காணப் படுகிறார்கள். இந்நிலைமை நீடித்தால் பட்டினி மரணமேதவிர வேறு வழியில்லை நெசவுத்தொழிலைத்தவிர வேறு வேலைகள் செய்து பிழைக்க வழியறியாத கைத்தறியாளர்கள் படுகஷ்ட மகண்கொண்டு பார்க்கக் கூடியதாக இல்லை கைத்தறியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டமான நிலைமை நிவாத்தி செய்யப்பட வேண்டுமானால், கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாக்கப்பட வேண்டுமானால், சர்க்காரின் கண்காணிப்பும் சட்ட மூலமான பாதுகாப்பும் மிக அவசியமாகும். ஆகையால் சர்க்கார் கைத்தறியாளர்கட்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான பிரச்சினைகளில், உடனடியாக கவனம் செலுத்தி பரிசீலனைகள் செய்து. மக்களின் ஜீவாதாரத்தொழிலான நெசவுத்தொழிலையும் நெசவுத்தொழிலாளர்களையும் பாதுகாக்கவேண்டியது அவசியமாகும் நெல்லை ஜில்லாவின் சென்னை சட்டமன்ற உறுப்பினர்களும்; பொறுப்பு வாய்ந்த பொது ஊழியர்களும். கைத்தறியாளர்கள் விமோசனத்திற்கான காரியங்களில் கருத்தைச்செலுத்த வேண்டியது கடமை யல்லவா?

இங்ஙனம்,
எஸ். எம். திருவுடையான்.
சங்கரன் கோவில்
29—9—49

எஸ்.வி. சுப்பையா ரா. அருணாசலம், வி. தமிழ்ச்சோழன், ரா. கணபதி, எஸ். ஏ. உலகநாதன், வி. கே. கந்தசாமி, மு. வேலாயுதம், கே. கோபால முருகு. சுப்பிரமணியம், பி. நாராயணசாமி.

பின்னர் கழகநடை முறை பற்றித் தோழர்கள் முருகு. சுப்பிரமணியம், தமிழ்ச்சோழன், க. ஞானமுத்து, வி. கே. கந்தசாமி, மு. வேலாயுதம் ஆகியோர் விளக்கிப்பேசினர். செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்ததென விளம்பர உறுப்பினர்கள் அறிவிக்கின்றனர்.

* * *

### கம்பர் நத்தம்—கிளை

கம்பர்நத்தம், அக். 2—

இவ்வூர் திராவிடர் கழகத்தைத் "திராவிட முன்னேற்றக் கழகம்" எனப் பெயரை மாற்றி அமைத்து, பெரியாரின் தலைமையின் கீழ் இனி வேலை செய்வதில்லை என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. கீழ்க்கண்டவாறு புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—பூஞ்செழியன். துணைச் செயலாளர்: — தனராஜ். விளம்பர உறுப்பினர்:—சுந்தரராசன். மற்றும் 5 பேர் கொண்ட செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். எனப் பூஞ்செழியன் எழுதுகிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1.